**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.23/2018**

**13.07.2022 - வா.சா. 1 போர் மன்னன் சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆர்.கே.எம். கல்லூரியில் நான் சட்டம் படித்தேன். 2012ல் சட்டம் முடித்தேன். இவ்வழக்கை தவிர்த்து திருவண்ணாமலை விரைவு நீதிமன்றம் மகிளாவில் சி.சி. 9/2012 காசோலை வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். விசாலாட்சி என்பவர் மீது நான் அசல் வழக்கு எண் 134/2004 கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்து திருவண்ணாமலை மகிளா நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டது அதன் மீது மேல் முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மகிளா நீதிமன்றத்தில் விசாலட்சிக்கு ஆதரவாக தீர்ப்பானது. விசாலாட்சி சி.ஆர்.பி தாக்கல் செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பி.வா.சா.ஆ.1. 2004ல் விசாலாட்சியின் மீது போட்ட வழக்கின் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். தாவா வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ரூ. 11 லட்சம் முன்பணமாக கொடுத்தோம் ஏன் வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படவில்லை என்றால் அவர் கிரையம் செய்து தருவதாக கூறினார். ரூ. 11 லட்சத்தை நான் பணமாக கொடுத்தேன். நான் தற்போது வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். வருமானத்திற்காக ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் போது வழக்கறிஞர் தொழிலை சஸ்பென்ட் செய்யவில்லை. ரவிந்திரன் செட்டியார் கிரையம் ஒப்பந்தம் ஏற்பட்டு 2 ஆண்டுகளுக்குள் சென்னை மருத்துவமனையில் இறந்ததாக கேள்வி பட்டேன். ரவிந்திரன் செட்டியாரோ அவரது பிள்ளைகளோ அவர்கள் பெற்ற முன்பணத்தை திருப்பி தருவதாக என்னிடம் Undertaking கொடுக்கவில்லை. தாவா கிரைய ஒப்பந்தம் 8.1.2015ல் ஏற்பட்டது. இவ்வழக்கை 21.3.2018 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு 3 ஆண்டுகள் கழித்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- போர்மன்னன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.